**G.W.O.P. No. 643/2021**

**07.11.2024**

ம.த.சா. 1- திருமதி.சாந்தி, க/பெ. சுந்தரவதனம்

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 13.15 மணி**

என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் மற்றும் அவர்களின் பெயர்கள் என்ன என்றால் என்னுடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை, என் பெற்றோருக்கு நான் ஒரே மகள் ஆவேன். 2021ம் வருடம் சுந்தரவதனம் இறந்தபிறகு ஆவடியிலுள்ள சகோதரியின் வீட்டில் தங்கியிருந்தேன் என்று கூறியிருந்தேன், அவர் யார் என்றால் எனக்கு தெரிந்தவர். நான் அவரை என்னுடைய சகோதரி என்று அனைத்து மனுக்களில் கூறிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவர் என்னை சகோதரி மாதிரி பார்த்துக்கொண்டார். ஆகவே தான், சகோதரி என்று அனைத்து மனுக்களிலும் போட்டுள்ளேன். என்னுடைய பூர்வீக ஊர் என்ன என்றால் மதுரை ஆகும். என்னுடைய கல்வித்தகுதி என்ன என்றால் நான் படிக்கவில்லை. என் தந்தை பெயர் புஷ்பராஜ். என் தந்தை பெயர் குறிப்பிட்டு நீதிமன்றத்தில் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. என் முதல் கணவர் பார்த்தசாரதியுடன் திருமணம் நடந்த பிறகு எங்கு வசித்து வந்தோம் என்றால் வேலூர் மற்றும் ராணிப்பேட்டையில் வசித்து வந்தோம். அப்போது நான் மற்றும் என் கணவர் என்ன வேலை செய்தோம் என்றால் என் கணவர் டெய்லர் கடை வைத்திருந்தார், நான் எந்த வேலையும் பார்க்கவில்லை. எனக்கும் என் முதல் கணவருக்கும் திருமணமாகி எத்தனை வருடங்கள் கழித்து குழந்தை பிறந்தது என்றால் 2000ம் வருடம் திருமணம் நடந்தது, 2002ம் வருடம் மகன் பிறந்தார், என் மகன் 2007ம் வருடம் இறந்துவிட்டார். நான் ஏற்கனவே எனது விசாரணையில் 2002ம் வருடம் திருமணம் ஆனது என்று முன்னுக்குப்பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில் என் மகன் 2005ம் வருடம் இறந்ததாக கூறியுள்ளேன் என்றால் தப்பாக இருந்திருக்கும். என் கணவர் இறந்த காரணத்தினால்

தவறாக போட்டிருக்கலாம். இறந்த என் மகனின் பெயர் சுரேந்தரன். சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவிற்கும் நான் ஏற்கனவே அளித்த சாட்சியத்திற்கும் தற்போது அளிக்கும் சாட்சியத்திற்கும் நிறைய முரண்பாடுகள் உள்ளது என்றாலும் என் முதல் கணவர் மற்றும் என் மகன் தற்போது வரை உயிருடன் உள்ளார்கள் என்றால் சரியல்ல. என் முதல் கணவரின் தந்தை பெயர் என்ன என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. அவர் தந்தை பெயர் பெருமாள் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் ஏற்கனவே விசாரணையில் என் முதல் கணவர் பெயர் ஈஸ்வரன் என்றும் அவரது தந்தையின் பெயர் பார்த்தசாரதி என்று கூறியுள்ளேன் என்றால் என் முதல் கணவர் பெயர் ஈஸ்வரன் பார்த்தசாரதி. எனக்கும் சுந்தரவதனத்திற்கும் நடைபெற்ற திருமணம் யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் சுந்தரவதனம் அவருடைய நண்பர்களை அழைத்து வந்தார். கோவிலில் தான் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது புகைப்படம் எடுத்தோமா என்றால் எடுத்தோம். அவ்வாறு ஒரு திருமணம் நடைபெறாததால் அதற்கு ஆதாரமாக புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மதுரையில் என் பெரியம்மா வீட்டில் தங்கியிருந்தேன். அவர்கள் இறந்தபிறகு வேலூர் சென்றுவிட்டோம். என்னுடைய திருமணத்திற்கு என் தரப்பில் யார், யார் வந்தார்கள் என்றால் என் அம்மா, பெரியம்மா எல்லாரும் இறந்துவிட்டார்கள், யாரும் வரவில்லை. என் பெரியம்மா எப்போது இறந்தார் என்றால் சுந்தரவதனத்தை திருமணம் செய்தவுடன் இறந்துவிட்டார். என் பெரியம்மா திருமணத்திற்கு பின் இறந்தார் என்று தற்போது முரணாக கூறுகிறேன் என்றால் என் பெரியம்மா திருமணத்திற்கு வந்தார் என்று சாட்சி தற்போது கூறுகிறார். என்னுடைய மனுவில் சுந்தரவதனம் அவருடைய திருமணத்தை குறித்து அவரது குடும்பத்தாரிடம் கூறாமல் இருந்ததற்கு காரணம் என்ன என்றால் அவர் தான் கூறவேண்டாம் என்று கூறினார். 2015ம் வருடத்திற்கு பின் நானும் சுந்தரவதனமும் ஆவடி, பருத்திப்பட்டில் 5 வருடங்கள் வசித்து வந்தோம். பின்னர் ஈரோட்ல் 1 1/2 வருடங்கள் இருந்தோம். பின்னர் திருவண்ணாமலையில் 1 1/2 வருடங்கள் வசித்தோம். 8 வருடங்கள் நான் அவருடன் வாழ்ந்தேன் என்றால் அவர் மே 2021 வருடம் இறந்தார். எனக்கு உண்மையான சங்கதிகள் தெரியாது என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுந்தரவதனம் என் பெயரில் ஏதாவது பாலிசி,

சேமிப்பு வைத்துள்ளாரா என்றால் அவர் எதுவும் போடவில்லை. 2015-2021 காலக்கட்டத்தில் சுந்தரவதனத்தின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என்னுடைய வீட்டிற்கு வந்துள்ளார்களா என்றால் அவரின் நண்பர்கள் முதலில் வந்தார்கள், பின்னர் பணிமாற்றம் வந்ததால் வரவில்லை. சுந்தரவதனத்தின் நண்பர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு ஒரு திருமணப் பந்தம் எங்களுக்குள் இல்லை என்றாலும் நான் அவருடைய வீட்டின் பணிப்பெண் என்றால் சரியல்ல. சுந்தரவதனத்தின் இறுதிச்சடங்கிற்கு பணம் எவ்வாறு ஏற்பாடு செய்தேன் என்றால் ரூ.9,000/- ரொக்கமாக மருத்துவமனைக்கு செல்லும்போது கொடுத்திருந்தார். அவர் இறந்தபிறகு அருகில் இருந்தவர்களை வைத்து இறுதிச்சடங்கிற்கான ஏற்பாடுகளை செய்தேன். சுந்தரவதனத்துடன் பணிபுரிந்தவர்கள் இறுதிச்சடங்கிற்கு உதவினார்களா என்றால் வந்தார்கள். அவர்கள் பணம் கொடுத்து உதவினார்களா என்றால் அவர்கள் கேட்டபோது நான் பணம் இருப்பதாக கூறிவிட்டேன். எதிர்மனுதாரர் சுந்தரவதனத்தின் முதல் மனைவியின் சகோதரருக்கு கொரோனா காலம் என்பதால் ரூ.17,500/- அனுப்பி நீலம் அறக்கட்டளை மூலமாக இறுதிச்சடங்கு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் ரூ.8,000/- பணம் கொடுத்தேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில் எதிர்மனுதாரருக்கு குழந்தையை பார்க்க உத்தரவு அளித்தார்களா என்றால் அளித்தார்கள். நான் அனுமதி வழங்கினேனா என்றால் என் வீட்டிற்கு வந்து குழந்தையை பார்த்தவுடன் அவர் குழந்தையை திட்டினார். குழந்தை பயந்து ஓடிவிட்டது. வீட்டின் மேல் குடியிருப்பவர்கள் வந்து சத்தம் போட்டார்கள். ஒரு முறை மட்டும் தான் வந்துள்ளார். நான் இதுவரையில் அவரை ஒருநாள் கூட பார்ப்பதற்கு அனுமதித்தது கிடையாது என்றாலும் இந்நீதிமன்றத்தில் வைத்து பார்த்துள்ளார் என்றால் சரியல்ல. சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில் குழந்தை நலன் வாரியம் மூலம் குழந்தை நலனை சரிபார்க்க கூறினார்கள் என்றால் அவர்கள் ஒரே முறை என் வீட்டிற்கு வந்து குழந்தையை பார்த்து விசாரித்துவிட்டு சென்றார்கள். என் முதல் கணவருடன் எனக்கு திருமணம் ஆகும்போது என்னுடைய வயது என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது ஆதார் அடையாள அட்டையில் என் பெயர் P.சாந்தி என்று குறிப்பிட்டுள்ளேன். அதில் P என்பது யாரை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் S என்று தான் குறிப்பிட்டேன், தவறாக ஆதார்

அட்டையில் P என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என் தந்தையின் பெயரும் P.புஷ்பராஜ் தான். ஆதார் அட்டையில் பா.சாந்தி என்று தமிழில் குறிப்பிடப்பட்டுள்ளது, பா என்றால் பார்த்தசாரதி என்று அர்த்தம், நான் புஷ்பராஜ் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் பெயர் பார்த்தசாரதி மட்டும் தான் என்றாலும் ஈஸ்வரன் பார்த்தசாரதி இல்லை என்றால் சரியல்ல. சென்னை உயர்நீதிமன்றம் சுந்தரவதனத்தின் குழந்தைகளுக்கு வங்கியில் கணக்கு open பண்ணச்சொன்னார்கள், அது எந்த வங்கி என்றால் தேசியமயமாக்கப்பட்ட வங்கி, எந்த வங்கி என்று எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்த குடும்ப அட்டையில் என் பெயர் எந்த ஆண்டு சேர்க்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் குடும்ப அட்டை எந்த வருடத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தற்போது என் கணவர், என் குழந்தைகளுடன் குடும்ப அட்டை உள்ளது. என் முதல் கணவர் பார்த்தசாரதியுடன் குடும்ப அட்டை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சி தற்போது இருந்தது என்று கூறுகிறார். குடும்ப அட்டை 333515791449 என்ற எண்ணுள்ள குடும்ப அட்டை தற்போது என் பெயரில் உள்ளது என்றாலும் அதில் என் கணவர் பெயர் பார்த்தசாரதி என்றும் என் மகன் பெயர் ராஜா என்று உள்ளது என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் கணவர் பார்த்தசாரதி எப்போது இறந்தார் என்றால் என் மகன் இறந்தவுடன் அவருக்கு மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு அது இரத்தத்தில் கலந்து இறந்துவிட்டார்.

**<u>குறுக்கு விசாரணை பகுதி முடிந்த நேரம் 14.00 மணி</u>**

**<u>உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

**<u>உணவு இடைவேளைக்கு பின் மற்ற நீதிமன்ற வேலைகளுக்கு பிறகு மீண்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி 15.40 மணி</u>**

என் கணவர் இறந்தபிறகு சுந்தரவதனத்தின் குழந்தைகளுக்கு டியூசன் சொல்லிக் கொடுத்த நண்பரின் வீட்டில் தங்கியிருந்தோம் என்று கூறியுள்ளேன், அவர் பெயர் என்ன என்றால் பானுமதி ஆகும். நான் ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் உறவினர் பானுமதி என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர் உறவினர் போல் எங்களை பார்த்துக்கொண்டார். எனது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 2, பத்தி 3ல் ஆவடியில் உள்ள என்னுடைய சகோதரி வீட்டில்

வாழ்ந்து வந்தோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர் என் சகோதரி போல் பார்த்துக்கொண்டார். இளைய சகோதரி என்று உடன் பிறந்தவர்களை மட்டும் தான் கூற முடியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இளைய சகோதரி பானுமதியின் அறிவுறுத்தலின்பேரில் பொய்யான சங்கதிகளை கூறி நீதிமன்றத்தை திசை திருப்புகிறேன் என்றால் சரியல்ல. என் முதல் கணவர் பார்த்தசாரதி மஞ்சள்காமாலை நோயினால் மருத்துவமனையில் இறந்தாரா அல்லது வீட்டில் வைத்து இறந்தாரா என்றால் வீட்டில் வைத்து இறந்தார். அவர் மஞ்சள்காமாலை நோயினால் இறந்திருந்தால் அவர் இறப்புச்சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவர் உயிருடன் இருப்பதால் தான் அவர் வீட்டில் வைத்து இறந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் கணவர் பார்த்தசாரதிக்கும் எனக்கும் பிறந்த முதல் குழந்தை எங்கு வைத்து பிறந்தது என்றால் வீட்டில் வைத்து தான் பிறந்தது. அந்த குழந்தைக்கு பிறப்புச்சான்றிதழ் உள்ளதா என்றால் வாங்கி வைத்திருந்தேன், வீடு மாறும்போது காணாமல் போய்விட்டது. பிறப்புச்சான்றிதழ் தற்போதும் கிடைக்கும் என்றாலும் அவர் உண்மையான பெயர் ராஜா என்பதை மறைக்க வேண்டும் என்பதற்காக பிறப்புச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுந்தரவதனத்தின் வீட்டில் பணத்தை திருடியதாக கூறி அவர் என்னை பணியிலிருந்து நீக்கினார் என்றால் சரியல்ல. அவர் வீட்டில் பணம் வைப்பதில்லை. நான் பணத்தை திருடியதாக கூறி அவர் குழந்தைகளை பார்க்க ஆள் இல்லை என்று கூறி குழந்தைகளை அவர் அலுவலகத்திற்கு அழைத்துச்சென்று ஒரு வாரம் வைத்திருந்தார் என்றால் ஒரு வாரம் வீடு தேடிக்கொண்டிருக்கும்போது நான் ஈரோட்டில் இருந்தேன், அவர் திருவண்ணாமலை அலுவலகத்தின் உள்ளே குழந்தைகளை தங்க வைத்திருந்தார். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. குழந்தைகளை தங்க வைத்த விவரம் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் டி-6, ஆவடி காவல் நிலையத்தில் என் மீது புகார் அளித்தார் என்றால் சரிதான். சி.எஸ்.ஆர். எண். 623/2021, நாள். 10.06.2021 என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் குழந்தைகளை திருடி வைத்திருப்பதாக புகார் அளித்தார். ஆவடி காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்து விட்டு குழந்தைகளை நல்லபடியாக பார்த்துக்கொள்ளுங்கள் என்று அனுப்பி வைத்துவிட்டார்கள்.

சட்டவிரோதமாக குழந்தைகளை வைத்திருப்பதாகத் தான் புகார் அளித்தார். நான் மேற்படி விவரத்தை மறைக்க வேண்டும் என்று மேற்படி விவரங்களை என் மனுவில் கூறவில்லை என்றால் சரியல்ல. எ.ம.த.சா.ஆ.7 ல் சுந்தரவதனத்தின் இறப்புச்சான்றிதழில் மனைவி என்று சங்கீதா லட்சுமி என்று உள்ளது என்றால் எதிர்மனுதாரர் மாற்றிவிட்டார். இன்றைய தேதி வரையிலும் சுந்தரவதனத்தின் இறப்புச்சான்றிதழில் முதல் மனைவி சங்கீதா பெயர் தான் உள்ளது என்றால் சரியல்ல. சங்கீதா 2013ம் வருடத்தில் இறந்துவிட்டார். 2015ம் வருடம் நான் சுந்தரவதனத்தை திருமணம் செய்தேன். நான் முறையான மனைவி என்பதற்கு சட்டரீதியான ஆவணங்கள் இல்லாததால் அவருடைய இறப்புச்சான்றிதழில் என் பெயர் இல்லாமல் அவர் முதல் மனைவி பெயர் உள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள போலியான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நீதிமன்றத்தை திசை திருப்புகிறேன் என்றால் சரியல்ல. நான் பெற்ற போலியான இறப்புச்சான்றிதழை அடிப்படையாக வைத்து தான் குடும்ப அட்டை, வாரிசுரிமைச்சான்றிதழில் என் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுந்தரவதனத்தின் சட்டரீதியான மனைவி என்ற ஆவணம் இல்லாத காரணத்தினால் தான் அவருடைய இறப்பிற்கு பிறகு பென்சன் எதுவும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. சுந்தரவதனத்தின் சொத்து ஏதாவது தற்போது விற்றுள்ளேனா என்றால் இல்லை. சட்டவிரோதமாக நான் பெற்ற வாரிசுரிமைச்சான்றிதழை வைத்து சுந்தரவதனத்தின் சொத்துக்களை நான் விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என் முதல் கணவர் பெயர் பார்த்தசாரதி(ஆதார் எண். 7175 7400 8376/ போன் எண். 7299327483) என் மகன் ராஜா(ஆதார் எண். 4423 0146 5388) என்றும் இருவரும் விலாசம் எண். 1ஏ, தெற்கு மாட வீதி, பாடி, திருவள்ளூர், சென்னை-50 என்ற முகவரியில் வசித்து வருகிறார்கள் என்றாலும் என்னுடைய பழைய ஆதார் அட்டையிலும் அதே முகவரி பதிவாகியுள்ளது என்றாலும் ஆகையால் உயிருடன் இருக்கும் என் முதல் கணவர் பார்த்தசாரதியும் என் முதல் கணவருக்கு பிறந்த குழந்தை ராஜாவும் உயிருடன் இருப்பதை மறைத்து மறைந்த சுந்தரவதனத்தின் வீட்டில் பணிப்பெண்ணாக சேர்ந்த நான் மற்றும் என் கணவர் பார்த்தசாரதி, என் மகன் ராஜா மற்றும் இளைய சகோதரி பானுமதி ஆகியோர் சேர்ந்து மறைந்த சுந்தரவதனத்தின் இறந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு அவரது சொத்துக்கள் மற்றும் ஆஸ்திகளை

சட்டவிரோதமாக அனுபவிப்பதற்காக சட்டவிரோதமான வாரிசுரிமைச்சான்றிதழ் மற்றும் குடும்ப அட்டையில் என் பெயர் சேர்த்து கூட்டுச்சதியில் ஈடுபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் சுந்தரவதனத்திற்கும் முறையாக திருமணம் நடந்ததற்கான ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எங்கள் இருவருக்கும் திருமணம் ஆகவில்லை என்றாலும் நான் பணிப்பெண் (ஆகையால் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு முகாந்திரம் இல்லை ) மட்டும் தான் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 16.05 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.